☎ 04175 - 236654 / 235295
SHANMUGA INDUSTRIES
ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)
Accredited with "B+" GRADE by NAAC
Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

# சண்முகா கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சங்கமம்

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சங்கமம் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமையுரையாற்றினார். செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்,** பொருளாளர் **எ.ஸ்ரீதர்** முன்னிலையுரையாற்றினர். முன்னதாக, முன்னாள் மாணவர் பேரா.**பி.பாலாஜி** வரவேற்புரையாற்றினார். ஆண்டறிக்கையினை முன்னாள் மாணவர்கள் சங்கச் செயலாளர் பேரா.**இரா.பிரலா** வாசித்தார். விழாவில் கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்,** முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். நிறைவாக முன்னாள் மாணவர்கள் சங்கப் பொருளாளர் முனைவர் **பெ.சக்திவேல்** நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியினை வணிகவியல் துறை மாணவி **பத்மபிரியா** தொகுத்து வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட TCS மும்பை, மண்டல மனிதவள மேலாளர் **நயீம் கான்** அவர்கள் கலந்து கொண்டு, தனது உரையில், ஒரு கல்லூரியின் 100 சதவீத வேலைவாய்ப்பிற்கு முன்னாள் மாணவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்றும், தற்போது பயிலும் மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக முன்னாள் மாணவர்கள் இருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் மாணவர்களை வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் 800 க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவ, மாணவியருடன், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

செயலர் மற்றும் தாளாளர்



சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
NAAC
முன்னாள் மாணவர்கள் சங்கமம்
சிறப்பு விருந்தினர்
திரு.நயீம் கான் அவர்கள்
SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE
THIRUVANNAMALAI - 606603
SINCERITY
STUDY
SERVICE